


23.01.2023

# 4. 'கொஞ்சத்தில்' தேவனோடு உடன்படிக்கை செய்யுங்கள்!

எதிர்பாலரோடு கொண்ட கற்பின் தூய்மையை குறிப்பிட்டு "என் கண்களோடே உடன்படிக்கை பண்ணினேன்!" என்று பக்தன் யோபு கூறினார் (யோபு 31:1). கிட்டத்தட்ட அந்த அதிகாரம் முழுவதும், தான் கர்த்தருக்கு பயந்து தீமையை அல்லது பாலிய இச்சையிலிருந்து தன்னை விலக்கிவைத்து வாழ்ந்த ஜீவியத்தையே விவரித்தார். தன் நடை, தன் கைகள், அயலான் வீட்டு ஸ்திரீயிடம் உண்மை, தன் வீட்டு வேலைக்காரிகளிடத்தில் உண்மை...... இவ்வாறு கர்த்தருக்குப் பயந்து வாழும் ஜீவியத்தில், தன் மனதில் கூட இரகசியமாய் மயங்கிடவில்லை என்றே தன் உத்தம சாட்சியை யோபு விளங்கச் செய்தார்! அப்படியிருந்தும், யோபுவின் கண்களுக்கு முன்பாக இருந்த தீமை சுமார் 10% மாத்திரம் என்றே கூறலாம்...... ஆனால் அவன் அறியாத 90% தீமைகளிலிருந்து (பாவங்களிலிருந்து) கர்த்தரே அவனைக் காத்தருளினார். இதைக் கடைசியாக உணர்ந்த யோபு "தேவரீரே சகலத்தையும் செய்ய வல்லவர்" (யோபு 42:2) எனக் கூறி நின்றான்! தேவனும், இந்த தெய்வபயம் நிறைந்த யோபுவை "என் தாசனாகிய யோபு" எனக்கூறியே அகமகிழ்ந்தார் (வச.7).

– ரத்னம்